www.newwisdomministries.com

# ஞானஒளி



# என் ஆண்டவரே என் கடவுளே



ஞானம் 6 - இதழ் 12
19.03.2023



# தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர், ஆசிரியர் – ஞான ஒலி

## கடவுளுக்குரியது கடவுளுக்கே

இயேசு கிறிஸ்துவில் பிரியமான எனதருமை சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள்.

இந்த வாரத் தலையங்கத்திலே, நாம் எந்த அளவையால் அளக்கின்றோமோ, அதே அளவே நமக்குத் திரும்பக் கொடுக்கப்படும் என்ற கருத்தை மையப்படுத்தியுள்ளேன். நாம் எதை அளக்கின்றோம் என்பதே இங்கு முக்கியம். நாம் கொடுப்பதே அச்சுபிசகாமல் நமக்குக் கொடுக்கப்படும். அதன் அளவு குறையாது. சில சமயம் அதிகமாகத்தான் இருக்கும். முக்கியமாக நாம் தருவது தவறாக இருக்குமென்றால்...அதுதான் அளவுக்கதிமாக விளைச்சலைத் தரும். நாம் தருவது நல்லதாக இருக்குமானால், நாம் அளந்து போட்ட பாத்திரத்தின் தன்மையைப் பொறுத்து சரிசமமாகவோ, அதிகமாகவோ, அல்லது அதைவிடக் குறைவாகவோதான் இருக்கும். எது எப்படியிருப்பினும். நம்மிடமிருந்து போவது திரும்பி வந்தாகவேண்டும் என்பதில் ஐயமேற்பட வழியேயில்லை.

ஒருமுறை ஒரு விவசாயி ஓர் அதியமான மரத்தை வளர்த்தார். அந்த மரத்தின் கனி மிகமிக சுவைமிக்கதாய் இருக்கும். அப்படிப்பட்ட மரம் அந்த நாட்டில் யாரிடமும் அதுவரை இருந்ததில்லை. அதன் முதல் கனியை தன் நாட்டு அரசிடம் கொடுக்க வேண்டும் என்று அவர் மிகவும் ஆசைப்பட்டார். ஆகவே அவர் அந்த மரத்தின் கனிகள் சிலவற்றை எடுத்துக் கொண்டு, அரண்மனைக்குச் சென்றார். அந்த விவிசாயி, தான் கொண்டு சென்ற கனிகளின் சிறப்பைப் பற்றி அந்த அரசனிடம் விளக்கிக் கூறிவிட்டு, அதுவரை யாருமே உண்ணாத அந்தப் பழங்களை முதன் முதலாக அரசருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்ற தனது ஆசையையும் கூறிவிட்டு, அந்தப் பழங்களை அரசரே முதலில் சாப்பிடவேண்டும் என்று அவரிடம் அந்தப் பழங்களைக் கொடுத்தார். அதைக் கேட்ட அந்த அரசன் மிகவும் மகிழ்ந்தான் தன் நாட்டைச் சேர்ந்த ஒரு விவசாயி தன்மீது எவ்வளவு அன்பும், மரியாதையும் வைத்திருக்கின்றார் என்று அறிந்து புலகாங்கிதம் அடைந்தார்.

அந்தப் பழத்தை அரசர் வாங்கி சுவைத்துப் பார்த்தார் அப்படிப்பட்ட ஒரு சுவையை அவர் அதுவரை



அனுபவித்ததேயில்லை.

அந்தப் பழத்தை அவருக்காகவே கொண்டுவந்து கொடுத்த அந்த விவசாயியை வெகுவாகப் பாரட்டினார் அந்த அரசர்

அவர் தன்மீது வைத்திருக்கும், அன்புக்குப் பதில் அன்பு செய்ய ஆசைப்பட்டு அரசர் அந்த விவிசாயிக்கு ஆயிரம் பொற்காசுகள் அடங்கிய ஒரு பையைக் கொடுத்தார்.

அப்போது அந்தப் பையிலிருந்து ஒரு தங்கக் காசு கீழே விழுந்து உருண்டு ஓடியது. அந்த விவிசாயி ஒரு நிமிடம்கூட தாமதியாது அந்த ஒரு தங்கக் காசை எடுக்க ஓடினார். அப்போது அதைப் பார்த்த அரசி, அரசரிடம், பாருங்கள் அரசே, நீங்கள் கொடுத்த ஆயிரம் தங்கக் காசுகளுக்காக உங்களுக்கு ஒரு நன்றிகூட சொல்லாமல், அந்த ஒரு தங்கக் காசுக்காக எப்படி அல்பத்தனமாக ஓடிகிறான் பாருங்கள், உங்களுக்கு நன்றி சொல்வதைவிட அவனுக்கு அந்தத் தங்கக் காசுதான் பெரிதாகப் போய்விட்டதா? என்றாள்.

அதைக் கேட்ட அரசன் மிகவும் கோவப்பட்டு, அந்த விவசாயிடம், ஏய் விவசாயி, என்னைவிட உனக்கு அந்த ஒரு தங்கக்காசுதான் பெரிசா? என்னை மதிக்காமல், நான் கொடுத்த பரிசுக்கு நன்றிகூட கூறாமல், அந்தக் காசுக்காக ஓடிய உன்னை சிறையில் அடைத்தால்தான் தகும், யாரங்கே இவனை சிறையில் அடையுங்கள் என்று கத்தினார்.

அப்போது அந்த விவசாயி, அரசே, என்னை மன்னித்துவிடுங்கள். நான் உங்களை அவமானப்படுத்தவேண்டும் என்று அவ்வாறு செய்யவில்லை. நீங்கள் தந்த அந்த தங்கக் காசில் உங்களின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அந்த உங்களின் உருவம்கூட தரையில் விழுந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அந்தக் காசு மண்ணில் விழுவதற்குள் அதை ஓடி எடுத்தேன்.

நான் உங்கள்மீது மிக உயர்ந்த மரியாதையை வைத்திருக்கின்றேன். உலகில் உள்ள அனைவரையும்விட உங்கள் மீதுதான் அதிக அன்பு வைத்திருக்கின்றேன். ஆகவேதான் இந்த அதிசயப் பழத்தை முதன் முதலாக நீங்கள்தான் சாப்பிட வேண்டும் என்று அதை உங்களுக்குக் கொடுத்தேன்.

உங்கள் மீது எவ்வளவு மதிப்பு வைத்திருக்கின்றேனோ, அதே அளவு உங்களின் உருவம் பொறித்திருக்கும் அந்தத் தங்கக் காசின்மீதும் வைத்திருக்கின்றேன் என்று அவர் சொன்னவுடன், அரசன், மிகவும் மகிழ்ந்து, மகனே, உன் அன்பை உணராமல், உன்னைத் தவறாக நினைத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு. உன்னைப்போன்றவர்கள்தான் இந்த நாட்டின் சொத்து. அந்தத் தங்கக் காசைவிட நீதான், உன் அன்புதான் எனக்கு மிகப் பெரிய சொத்து என்று கூறி, மேலும் ஓராயிரம் பொற்காசுகளை அவருக்குக் கொடுத்தாராம் அந்த அரசன்.

அன்பிற்கினியவர்களே.....நாம் பிறர்மீது வைத்திருக்கும் அன்பை மற்றவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளவே முடியாது. பல சமயம் நாம் தவறாகத்தான் புரிந்து கொள்ளப்படுவோம்.

ஆனால், நம் அன்பின்மீது களங்கம் இல்லை என்பதில் நாம் தெளிவாக இருந்தால், பிறரின் தவறான புரிதல்களை நாம் பொறுத்துக் கொள்வோம். காலம் நிச்சயம் கனியும், உண்மை ஒருநாள் அவர்களுக்குத் தெளிவாகப் புரியவரும்.

புனித தோமையார் இயேசுவின் உயிர்ப்பைத் தெளிவாக, தானே தொட்டு உணரவேண்டும் என்றபோது. அவர் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டார். ஆனால், அவர் உண்மையால் அர்ச்சிக்கப்பட்டபோது, ஆண்டவர் இயேசுவின் முன் விழுந்து, இயேசுவே, என் ஆண்டவரே, என் கடவுளே என்று தன் மாசற்ற அன்பினால் உயர்ந்த உள்ளமானார்.

ஒருவருக்கு அனைத்தும் குறைவாய் இருக்கும்போது, அவர் அனைத்தையும் பெற்றுவிடவேண்டும் என்று ஏக்கத்தோடு உழைக்க ஆரம்பிப்பார். அவர் நினைத்ததை அடைந்தவிட்டால், அவரிடம் இயல்பு நிலைக்கு மாறான மாற்றங்கள் வந்தால் அவர், நிதானமிழந்துவிட்டார் என்பது நிதர்சனமாகும்.

ஒருவர் வந்த பாதை, தனக்கான தற்போதைய நிலைமைக்கு காரணமாய் இருந்தவர்களை மறவாது, அவர்களுக்கான மரியாதையையும், மதிப்பையும் தருபவராய் இருந்தால், அவரின் பிற்காலம் இன்னும் வளமாயிருக்கும். அதைத்தான் பிரபஞ்சம் விதித்திருக்கின்றது.

நல்லவர் வாழ்வார்.அதுதான் உண்மை. நல்லவர்கள் நன்றியுடையவர்.


அதற்காகத்தான் குணமடைந்த மற்ற ஒன்பது தொழுநோயாளிகள் எங்கே? என்று குணம்பெற்று நன்றி சொல்ல வந்த அந்த ஒரு முன்னாள் தொழிநோயாளியைப் பார்த்து இயேசு கேட்டார்.

நாளும் நலமாய் வாழ, நன்றி ரொம்ப ரொம்ப முக்கியம்.....





# விவிலியம் அறிவோம்



## விவிலியம் அறிவோம் 82
## பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்

இன்றையவாசகர்கள் யூதமதத்தை அவர்கள் அனுசரிக்கும் சில வருடாந்திர விழாக்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பது வழக்கம். பாஸ்காப் பெருவிழா, அறுவடைப் பெருவிழா, கூடாரப் பெருவிழா மற்றும் பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் விழா என பல விழாக்களை இஸ்ரயேல் மக்கள் ஆண்டுதோறும் கொண்டாடினார்கள். அவற்றுள் முக்கியமான ஒரு விழா பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் விழா.ஐந்நூல்களின் மையமாக லேவியர் நூல் அமைந்துள்ளதுபோல லேவியர் நூலின் மையமாக பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் விழா அமைந்துள்ளது எனலாம். லேவியர் நூலின்; அமைப்பில் பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் விழா பற்றிய செய்திகள் தீட்டற்றவை விதிகள் (லேவி 11-15) மற்றும் தூய்மைவிதிகள் (லேவி 17-26) ஆகியவற்றிற்கு இடையில் அமைந்துள்ளது. இதுவே அதன் சிறப்பைக் கூறுவதாகக் கருதலாம். இஸ்ரயேல் மக்களைப ;பொறுத்தவரை பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்தான் ஆண்டின் முக்கியமான நாள். எபிரேய மொழியில் இந்தநாள் யோம் கிப்பூர் (*Yom Kippur*) என அழைக்கப்பட்டது. இந்தச் சொல்லின் உண்மையான பொருள் சுத்திகரித்தல், அல்லது பரிகாரம் செய்தல் என்பவனவாகும். பாவக்கழுவாய் நிறைவேற்றுவதன் வழியாகக் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் உள்ள உறவு சீரமைக்கப்பட்டுப் புதுப்பிக்கப்படுகிறது. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் பலியிடப்படும் விலங்குகளின் இரத்தம் உடன்படிக்கைப் பேழையின் மேலுள்ள இரக்கத்தின் இருக்கைமீது தெளிக்கப்படுவது பாவக்கழுவாய்

இடத்திற்கு கூட்டிவரப்படும். ஆரோன் இரு கைகளையும் உயிரோடிருக்கும் அந்தக் கிடாயின் மேல் வைத்து, இஸ்ரயேல் மக்களின் எல்லாக் குற்றங்களையும் தவறுகளையும் பாவங்களையும் அறிக்கையிட்டு அதன் தலைமேல் சுமத்தி, அதைப் பாலைநிலத்துக்குக் கொண்டு செல்ல நியமிக்கப்பட்ட ஆள் மூலம் அங்கு அனுப்பிவிடுவான் (லேவி 16:21). போக்கு ஆடு ஒரு அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. போக்கு ஆட்டின் மீது இஸ்ரயேல் மக்களின் அனைத்துக் குற்றங்களும் தவறுகளும் பாவங்களும் சுமத்தப்பட்டு பாலைநிலத்தில் விரட்டிவிடப்படுவதன் வழியாக பாளையத்திலிருந்து அனைத்து பாவங்களும் களையப்பட்டுவிட்டன என்பதற்கான அடையாளம். பாவக்கழுவாய்க்கான எல்லாச் சடங்குகளும் நிறைவேற்றப்பட்டதன் வழியாக மக்களின் எல்லாக் குற்றங்களையும் தவறுகளையும் பாவங்களையும் கடவுள் மன்னிக்கின்றார். கடவுளுக்கும் மக்களுக்கும் இடையில் மீண்டும் ஒரு புதிய உறவு ஏற்படுகிறது.

போக்கு ஆடு வழிபாட்டிற்குப் பிறகு ஆரோன் தனது வழக்கமான குருத்துவ உடைகளை அணிந்து கொண்டு தனக்காகவும் மக்களுக்காகவும் எரிபலிகளை ஒப்புக்கொடுக்கின்றார். இவ்வாறு செய்வதன் வழியாக ஆரோன் இஸ்ரயேல் மக்களுடைய புதுப்பிக்கப்பட்ட பக்தியை வெளிப்படுத்துகிறார். ஏனெனில் அவர்கள் இப்போது பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக, தூயவர்களாக இருக்கிறார்கள். பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் அர்த்தமுள்ளதாகஅமைவதற்கு இஸ்ரயேல் மக்களும் அவர்களுடன் வாழும் அன்னியரும் அந்த நாள் முழுவதும் வேலை ஒன்றும் செய்யாமல் தங்களையே மறுத்து, தாழ்ச்சி உள்ளவர்களாக இருக்கச் செய்யவேண்டும் (லேவி 16:29; மேலும் காண்கலேவி 23:26-32). அந்த நாளில் எந்தவிதமான வேலைகளும் அனுமதிக்கப்படவில்லை (லேவி 16:31). அன்று முழு ஓய்வுநாள். தங்களையே தாழ்த்துவது என்பது நோன்பு இருப்பதிலும் வேண்டுதலிலும் அடங்கியுள்ளது. ஒவ்வொரு தனி மனிதரும் கடவுள்முன் தங்களையே தாழ்த்தவேண்டும். நோன்பு இருந்து அவர்களின் பாவங்களை அறிக்கையிடவேண்டும்.

பாவக்கழுவாய் பலிகளுக்கான சாதாரண நடைமுறையின்படி பலிபீடத்தில் எரிக்கப்படாத விலங்குகளின் பகுதிகள் பாளையத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்டு சுட்டெரிக்கப்படும் (லேவி 16:27). எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர் இந்தப் பழக்கத்தை நகர வாயிலுக்கு வெளியே இயேசு இறந்ததுடன் ஒப்பிடுகிறார் (எபிரே 13:11-12). உரோமை 8:3 இலும் புனித பவுல் இயேசுவின் இறப்பைப் பாவக்கழுவாய் பலியுடன் ஒப்பிடுகிறார். எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் ஆசிரியர் நமதாண்டவர் தனது பாவங்களுக்காக முதலில் பாவக்கழுவாய் பலி செலுத்த வேண்டியதில்லை என்கிறார் (எபிரே 7:27); ஏனெனில் அவர்பாவம் இல்லாதவர். பாவக்கழுவாய் நிறைவேற்றுதலுடன் இயேசுவின் இறப்பை ஒப்பிடும் புதிய ஏற்பாட்டுப்

நிறைவேறுதலின்; அடையாளமாக உள்ளது. ஐந்நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வழிபாட்டு விழாக்களில் பாஸ்கா விழாவிற்கு அடுத்த நிலையில் பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்தான் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பாவக்கழுவாய் நிறைவேற்றுவதன் வழியாகக் குருக்கள், மக்கள் மற்றும் திருஉறைவிடமும் தூய்மைப்படுத்தப்பட்டு மீண்டும் அர்ப்பணிக்கப்படுகின்றனர்.

பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் விழா இஸ்ரயேல் மக்களைச் சுற்றி வாழ்ந்த மக்களின் கலாச்சாரங்களினால் ஏற்பட்ட தாக்கங்களின் விளைவாகவும் இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்;ஆனால் அதை நிரூபிப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் வழிபாடுகளைப் பார்க்கும்போது இந்தவிழா இஸ்ரயேல் மக்களுக்கான ஒரு சிறப்புக் கொண்டாட்டம் எனக் கருதவும் இடமிருக்கிறது. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் குருக்களுக்காகவும் மக்களுக்காகவும் பாவக்கழுவாய் பலிகள் நிறைவேற்றப்படுகின்றன. இது வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே நடக்கும் விழா. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள் விழாவிற்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் வழக்கமாக கோவிலில் நடத்தப்படும் பாவக்கழுவாய்ச் சடங்குகள் மற்றும் தூய்மைச் சடங்குகளை மறக்கடிக்கக்கூடியதாக அமையக்கூடாது. கோவிலில் வழக்கமாக நடக்கின்ற அந்த வழிபாடுகளும் முக்கியமானவை. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் குருக்கள் மற்றும் மக்களின் பாவங்கள் கழுவப்படுவது மட்டுமல்ல விலங்குகளையும் தானியங்களையும் பலியாக ஒப்புக்கொடுக்கப் பயன்படுத்தப்படும் பலிபீடமும் புனிதப்படுத்தப்பட்டு அர்ச்சிக்கப்படுகிறது. பாவக்கழுவாய் நிறைவேற்றப்படும் நாளில் தலைமைக்குரு திருத்தூயகத்தில் நுழைந்து அங்கிருக்கும் உடன்படிக்கைப் பேழையின் முன் இரத்தத்தைத் தெளிப்பார். தலைமைக் குருவைத் தவிர வேறு எவரும் தூயகத்திற்குள் நுழைய முடியாது. தலைமைக்குருவும் தான் விரும்பும்போதெல்லாம் தூயகத்திற்குள் நுழைய முடியாது. ஏனெனில் திருத்தூயகம் கடவுளின் அரியணை; கடவுளின் அரியணையின் முன் தகுதியல்லாமல் நுழைவது சாவைக் கொண்டுவரும் (லேவி 16:1-2). இந்தப் பிரிவில் தூயகம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது என்றாலும் அது திருத்தூயகம் (the Holy of Holies) என அழைக்கப்படவில்லை. மாறாக தூயகம் (the Holy Place) என்று மட்டுமே அழைக்கப்படுகிறது. தூயகத்தில் விளக்குத்தண்டு, திருமுன்னிலை அப்பம் வைக்கப்படும் மேசை மற்றும் எரிபலி செலுத்துவதற்கான பலிபீடம் ஆகியவை வைக்கப்பட்டிருக்கும். இவற்றைப் பார்க்கும்போது திருஉறைவிடம் முழுவதும் தூயகமாக கருதப்படுகிறது எனலாம். தூயகத்தில் நுழையுமுன் ஆரேன் நார்ப்பட்டாலான உள்ளாடை, கச்சை மற்றும்

தலைப்பாகையுடன் நார்ப்பட்டு மேற்சட்டை ஒன்றும் அணியவேண்டும். இந்த புனித உடைகள் அந்த நாளுக்குத் தேவையான தூய்மையைக் குறிக்கும் அடையாளங்களாக உள்ளன. எனவே இந்த உடைகளை அணிந்தவாறு ஆரோன் தூயகத்திற்குள் நுழையவேண்டும்.

தலைமைக் குருவான் ஆரோனின் முக்கியமான பணி மக்களின் பாவங்களுக்காகப் பாவக் கழுவாய் நிறைவேற்றுவதுதான். மக்களின் பாவங்களுக்காக ஆரோன் பாவக்கழுவாய் நிறைவேற்றுவதற்கு முன்னால் ஆரோன் தனக்காகவும் தனது குடும்பத்தினருக்காகவும் பாவக் கழுவாய் பலிகள் செலுத்தவேண்டும். அதன் அடையாளமாக ஆரோன் பாவம் போக்கும் பலிக்குரிய காளையைத் தனக்காகவும் தன் குடும்பத்தாருக்காகவும் பலியிட்டு பாவக்கழுவாய் நிறைவேற்ற வேண்டும். அதன்பின் தூபக்கலசத்தை ஆண்டவர் திருமுன் இருக்கும் பலிபீடத்து நெருப்புத் தணலால் நிரப்பிக்கொண்டு, பொடியாக்கப்பட்ட நறுமணமிக்க சாம்பிராணியும் எடுத்துக்கொண்டு தூயகத்தினுள் நுழைவார். தூயகத்தில்; உடன்படிக்கைப் பேழையின்மேல் இருக்கும் இரக்கத்தின் இருக்கையைப் புனிதப்புகை மூடுமளவிற்கு ஆண்டவர் திருமுன் நெருப்பில் சாம்பிராணியையப ; போடுவார். மேலும் காளையின் இரத்தத்தில் சிறிது எடுத்து இரக்கத்தின் இருக்கை மீதும், இரக்கத்தின் இருக்கை முன்னரும் தெளிக்கவேண்டும். அதன் பிறகுதான் ஆரோன் மக்களுக்கான பாவக் கழுவாய் பலியாக ஆட்டுக்கிடாயை ஒப்புக்கொடுக்க முடியும். அதன் இரத்தத்தை எடுத்து இரக்கத்தின் இருக்கைமேல் தெளிக்கமுடியும்.

லேவி 16:16 இன்படி ஆரோன் தூயகத்திற்காகவும் பாவக்கழுவாய் பலி நிறைவேற்றுகிறார். பாவக்கழுவாய் நிறைவேற்றுவதற்காகப் பலியிடப்பட்ட விலங்கின் இரத்தத்தை சந்திப்புக் கூடாரம், ஆண்டவர் திருமுன்னிலையில் உள்ள பலிபீடம் மற்றும் திருஉறைவிடம் முற்றம் ஆகியவற்றில் தெளித்து அவைகளுக்காகவும் பாவக்கழுவாய் நிறைவேற்றுவார். ஏனெனில் திருஉறைவிடம் முழுவதும் இஸ்ரயேல் மக்களின் தீட்டுகள் நீங்குவதற்காக தூய்மைப்படுத்தப்பட்டு அர்ப்பணிக்கப்பட வேண்டும் (லேவி 16:19). காளையின் இரத்தமும் வெள்ளாட்டுக்கிடாயின் இரத்தமும் ஆண்டவர் திருமுன் உள்ள பலிபீடத்தை தூய்மைப்படுத்துவதற்காக தெளிக்கப்படவேண்டும். ஏனெனில் இஸ்ரயேல் மக்களின் பாவங்களாலும் குருக்களின் பாவங்களாலும் அது தீட்டுப்பட்டுள்ளது. பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் உள்ள இன்னொரு முக்கியமான சிறப்புக் கூறு என்னவென்றால் இரண்டாவது வெள்ளாட்டுக்கிடாயை போக்குஆடாக பாலைவனத்தில் விரட்டிவிடுவதாகும். போக்கு ஆடாக பாலைவனத்தில் விரட்டிவிடப்படும் இந்த ஆடு இஸ்ரயேல் மக்கள் அனைவருடைய பாவங்களையும் சுமந்து செல்கிறது.போக்கு ஆடு வழிபாடு கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது. போக்கு ஆடு என அழைக்கப்படுகின்ற உயிருடன் இருக்கிற வெள்ளாட்டுக்கிடாய் ஒரு தனிமையான

பாடங்கள் தூயகத்திற்குள் நுழைவது பற்றியும் பேசுகின்றன. இயேசு இறந்தபோது கோவிலின் திரைச்சீலை இரண்டாகக் கிழிந்தது (மத்தேயு 27:51). நமது தலைமைக்குருவாகிய கிறிஸ்து ஒரே ஒருமுறை தூயகத்திற்குள் சென்று எக்காலத்திற்குமென அதைப் படைத்து நமக்கு என்றுமுள்ள மீட்பு கிடைக்கும்படி செய்தார் (எபிரே 9:12) என எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஆசிரியர் கூறுகிறார். ஆரோனின் வழிவந்த குருக்கள் ஒவ்வொரு வருடமும் தூயகத்திற்குள் நுழையவேண்டும். அவ்வாறு இல்லாமல் கிறிஸ்து விண்ணகத்திற்குள் நுழைந்து கடவுளின் திருமுன்னிலையில் எப்போதும் வாழ்கின்றார் (எபிரே 9:7, 24). கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் என்ற முறையில் திருத்தூயகத்துள் நுழைந்து கடவுளின் திருமுன்னிலையில் வருவதற்கு நமக்குத் துணிவு உண்டு (எபிரே 10:19, 22). இதை நாம் எளிதாக எடுத்துவிடக்கூடாது. மாறாக இது நம்மை தூயவர்களாக, கறையில்லாத வாழ்வு வாழ ஊக்குவிக்கவேண்டும். அன்புத் தந்தையின் பிள்ளைகளாக வாழச் செய்யவேண்டும்.

பயணம் தொடரும்,
அருட்பணி ஆ. அலெக்ஸ் ஊஆகு



# ஞாயிறு மறையுரை



## தவக்காலம் 4ம் வாரம் – 19.03.2023

1 சாமுவேல் 16/1ஆ, 6,7, 10-13அ - எபேசியர் 5/8-14 - யோவான் 9/1-41

மறையுரை –அருட்பணி.இ.சைமன் பீட்டர், ஆசிரியர் – ஞான ஒலி

இயேசு கிறிஸ்துவில் பிரியமானவர்களே, இன்றைய நற்செய்தி, இயேசுவே மெசியா என்பதையும், அவரிடம் நம்பிக்கை கொள்பவர்கள் மீட்பைப் பெறுவர் என்ற பேருண்மையையும் எடுத்துக் கூறுகின்றது.

அதற்காக இயேசுவினால் பார்வை பெற்றவர் இயேசுதான் மெசியா, இறைவாக்கினர், கடவுளின் வல்லமையால் குணமளிக்கும் ஆற்றல் பெற்றவரே என்பதை உறுதிசெய்வதற்காக யூதரோடு அவர் செய்யும் வாதங்கள் அற்புதமானவை.

நோய்கள் முக்கியமாக தொழுநோயும், குருட்டுத்தன்மையும், விபத்துக்களும் முன்னோர்களின் சாபத்தினால் விளைந்தவை என்ற பார்வை யூதர்கள் மத்தியில் ஆழமாய் வேரூன்றியிருந்தது. ஆகவேதான் பார்வையற்ற ஒருவரைப் பார்த்தவுடன், அவர் குருடாயிருப்பது அவரின் பாவத்தாலா? அல்லது அவரின் பெற்றோரின் பாவத்தாலா என்று சீடர்கள் இயேசுவிடம் கேள்வி கேட்டார்கள்.

அன்று அவர் குணம் பெறுவதன் வழியாக கடவுளின் வல்லமை வெளிப்படவும், அவரின் நம்பிக்கை அறிக்கையால், அவர் இயேசுவே மெசியா, இறைவாக்கினர், குணமளிக்கும் ஆண்டவர் என்று அறிவிக்க வேண்டும் என்பதே இறைத்திட்டம் அதற்காகவே அவர் அப்படியுள்ளார் என்று இயேசு கூறுவது, இறைவன் அனைத்தையும் செம்மையாகச் செய்கின்றவர் என்ற சபையுரையாயர் 3ம் அதிகாரம் 11வது இறைவசனம் கூறிய உண்மையை மீண்டும் வலியுறுத்துகின்றது.

இயேசு தரையில் உமிழ்ந்து, சேறுண்டாக்கி, அவரின் கண்களில் பூசி, சீலோவாம் குளத்தில் போய்க் கழுவும் என்று சொல்கிறார். அவரும் அப்படியே கீழ்படிந்தார். குணம் பெற்று, பார்வையைத் திரும்பப் பெற்றார். அகமகிழந்தார்.

இந்த நேரத்தில் மேலும் ஒரு குருந்தகவலையும் தருகின்றார் நற்செய்தியாளர் யோவான். சீலோவாம் என்ற வார்த்தைக்கு அனுப்பப்பட்டவர் என்று பொருள் என்ற தகவலையும் கொடுத்து, இயேசுதான் தந்தையால் அனுப்பப்பட்ட மெசியா என்று அவரும் அதற்கு கட்டியம் கூறுகின்றார். யூதர்கள் அந்த உண்மையையும் புரிந்து கொள்வேண்டும் என்றும் அவர் இவ்வாறு கூறுகின்றார்.

அந்தப் பார்வையற்றவருக்கு இங்கு பெயர் கொடுக்கப்படவில்லை, ஆனால், மற்றவர்கள் அவனை பிச்சைக்காரன் என்றே அழைத்தனர். நீதானே பிச்சையெடுத்தவன், இப்போது நன்றாகப் பார்க்கின்றாய், பிச்சையும் எடுக்கவில்லை, அது நீயா? அல்லது வேறொருவனா? என்று மக்கள் கேட்டபோது....நான்தான் என்றும், தான் எவ்வாறு பார்வை பெற்றேன் என்பதையும் விளக்கி, இயேசு செய்த அற்புதத்தை அறிவிக்கின்றார்.

உடனே மக்கள் அவரை பரிசேயரிடம் கூட்டிக் கொண்டு போகின்றார்கள். அவர்கள் அதில் கண்டுபிடித்தது என்னவென்றால், அவர் ஓய்வுநாளில் குணமடைந்ததுதான். இயேசு. எப்படி ஓய்வுநாளை மீறலாம் அவர்

கடவுளிடமிருந்து வந்தவரில்லை, அதனால் மெசியா இல்லை என்று வாதிடுகின்றனர். அப்போது அந்தப் பார்வையற்றவரிடம், நீ அவரைப் பற்றி என்ன சொல்கிறாய் என்று யூதர்கள் கேட்டபோது, அவர் ஓர் இறைவாக்கினர் என்று அவர் சொல்கின்றார். மக்களும், பரிசேயர்களும் இயேசுவை இழிவு படுத்தினாலும், அவரைப் பற்றி அவதூறுகளைச் சொன்னாலும், எதனாலும் அவரின் நம்பிக்கை பலவீனமாகவில்லை. மேலும், மேலும் இயேசுதான் மெசியா, இறைவாக்கினர் என்று வலியுறுத்திக் கொண்டேயிருக்கின்றார். செம.

அதன்பிறகு, அவனைப்பற்றி அவனின் பெற்றோரிடமும் பரிசேயர்கள் கேட்கின்றனர். அவன் பார்வை பெற்றது பொய், இயேசு மெசியா அல்ல என்பதை வலியுறுத்துவதற்காக அவர்கள் போராடுகின்றார்கள்.

எற்கெனவே, யாரெல்லாம் இயேசுவை மெசியாவாக ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் அனைவரையும் தொழுகைக் கூடத்திலிருந்து விலக்கிவிட வேண்டும் என்று யூதர்கள் தங்களுக்குள் ஓர் உடன்பாடு செய்திருந்தார்கள். அதனால், அவனின் பெற்றோர், தன் மகன் சொல்வதைப் போலவே, இயேசுதான் மெசியா என்று சொன்னால், எங்கே தங்களையும் ஊரைவிட்டுத் தள்ளி வைத்துவிடுவார்களோ? என்று அஞ்சி, எங்களுக்கு எதுவும் தெரியாது, அவன் வயது வந்தவன்தானே, நடந்ததை அவனே சொல்லட்டும், அவனிடமே கேளுங்கள் என்று நழுவினார்கள்.

ஆகவே, யூதர்கள் மீண்டும் இரண்டாம் முறையாக, உண்மையைச் சொல்லி, கடவுளை மாட்சிப்படுத்து, இயேசு ஒரு பாவி என்பது எங்களுக்குத் தெரியும், ஆகவே இயேசு பாவி என்று சொல் என்று தந்திரமாக அவரிடம் கேள்வி கேட்கின்றார்கள்.

அதற்கு அந்தப் பார்வை பெற்றவர், அவர்களுக்குச் சற்றும் சளைக்காமல், உண்மையைச் சொல்லி, அவர்கள் சொன்னதுபோலவே, கடவுளை மாட்சிப்படுத்தினார். அவர்....

ஏற்கெனவே நான் உங்களிடம் சொன்னேன. அப்போது நீங்கள் கேட்கவில்லை, இப்போது மீண்டும் ஏன் கேட்கிறீர்கள்? ஒருவேளை நீங்களும் அவருடைய சீடர்கள் ஆக விரும்புகிறீர்களோ? என்று கேட்டார். என்னா நக்கல்ஸ்? சூப்பருல்ல?...அவர்கள் இவன் எங்கிருந்து வந்தான் என்பதே தெரியாது என்றார்கள். அதற்கு அவர், இது வியப்பாய் இல்லையா? எனக்குப் பார்வை அளித்திருக்கிறார், அப்படியிருந்தும் அவர் எங்கிருந்து வந்தவர் எனத் தெரியாது என்கிறீர்களே? பாவிகளுக்குக் கடவுள் செவிசாய்ப்பதில்லை. இறைப்பற்று உடையவராய்க் கடவுளின் திருவுளப்படி நடப்பவருக்கே அவர் செவிசாய்க்கிறார் என்பது நமக்குத் தெரியும். பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒருவர் பார்வை பெற்றதாக வரலாறே இல்லையே? இவர் கடவுளிடமிருந்து வராதவர் என்றால், இவரால் எதுவுமே செய்திருக்க இயலாது என்றார். பரலோகத் தந்தை அவர் இவ்வாறு பிறவியிலேயே பார்வையற்றிருக்க வேண்டும், இயேசுவினால் குணமடைய வேண்டும், அதனால் அவர் இயேசுவுக்கு சாட்சி பகரவேண்டும் என்ற திட்டம் வகுத்திருந்தார். அதன்படி அவர் குணம்பெற்று, யூதர்கள் முன்னும் தைரியமாக இயேசுவை அறிவிக்க கடவுளே இவ்வளவு ஞானத்தைக் அவருக்குக் கொடுத்துள்ளார். ஆகவேதான் அவர் யாருக்கும் பயப்படாமல் எத்தனை முறை சந்தேகப்பட்டாலும், அத்தனை முறையும், இயேசுவே மெசியா, அனுப்பப்பட்டவர், இறைவாக்கினர், குணமளிக்கும் கடவுளின் வல்லமை பெற்றவர் என்று அறிவித்தார்.

யூதர்கள் அவர் இவ்வாறு அறிவுரை கூறியதைப் பொறுக்காமல், அவர்கள் உடன்பாடு செய்து கொண்டதைப் போலவே, அவரை தொழுகைக் கூடத்திலிருந்து வெளியே துரத்திவிட்டார்கள்.

அதைக் கேள்விப்பட்டவுடன் இயேசு அவருக்கு மேலும் ஓர் அற்புத அனுபவத்தைத் தருகின்றார்.

மானிட மகனிடம் நீர் நம்பிக்கை கொள்கிறீரா? என்று அவரிடம் கேட்டார். அவர் மறுமொழியாக, ஐயா, அவர் யார்? சொல்லும், அப்போது நானும் அவரிடம் நம்பிக்கை கொள்வேன் என்றார். இயேசு அவரிடம் நீர் அவரைப் பார்த்திருக்கின்றீர். உம்மோடு பேசிக் கொண்டிருப்பவரே அவர் என்றார். அவர் ஆண்டவரே நம்பிக்கை கொள்கிறேன் என்று கூறி அவரை வணங்கினார்.

அவரில் நம்பிக்கை கொண்ட நாமனைவரும் நற்செய்திப் பணியில் ஆர்வம் காட்டவேண்டும். பார்வையுள்ள நாம் இன்னும் அதிகமாக.....அதுவே இயேசுவின் கட்டளை.....



# தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு

1 சாமு. 16:1ஆ, 6–7, 10–13அ,
1 எபே. 5:8–14, யோவா. 9:1–41

**19-03-2023**



**பா. சேவியர்**
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

திருமுழுக்கால் கழுவப்பட்டு, புதிய பார்வை பெற்று, புதுப் படைப்பாக மாறியுள்ள அன்பு இறை மக்களே உங்கள் அனைவரையும் தவக்காலம் 4–ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்று இத்திருப்பலி வழியாக இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு இறைவன் நம்மை அழைக்கிறார். ஒளி பெற்ற மக்களாய் வாழ அழைக்கப்பட்டிருக்கும் நாம் இறைவனிடம் ஆழமான, அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து வாழ்கிறோமா? என்ற கேள்வியை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வழிபாடு.

பிறவியிலேயே பார்வை இழந்த ஒருவர் படிப்படியாக பார்வை பெறுவதையும், பார்வையுள்ள பலர் படிப்படியாக பார்வை இழப்பதையும், இயேசு புறக் கண்களுக்கு ஒளி அளிப்பவர் மட்டுமல்ல, அகக்கண்களையும் திறந்து அதற்கு விசுவாச ஒளி ஏற்றுபவர் என்பதையும் இன்றைய நற்செய்தி சுட்டிக் காட்டுகின்றது.

இயேசு பிறவிக் குருடனை பார்வை பெறச் செய்கின்றார். இயேசுவின் இந்த அருளடையாளம் அவரை உலகிற்கு வந்த ஒளியாகக் காட்டுகின்றது.

ஒளியின் மக்களாக வாழ அழைப்பு விடுக்கும் இன்றைய வாசகங்களை உணர்ந்து புதுப் பார்வை பெற்று, இதயத்தைப் பார்க்கும் இறைவனிடம், ஒளியின் மக்களாய் வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

கிறிஸ்துவை நம் வாழ்வின் ஒளியாக ஏற்று, உலகளாவிய சகோதரப் பார்வை பெற்று, உண்மை விளக்கை நெஞ்சில் ஏற்றி, நன்மை செய்து நிறை வாழ்வை நோக்கிப் பயணிப்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஈசாயின் கடைசி மகனான தாவீதுதான் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர் என்பதை சாமுவேல் இறைவாக்கினர் கண்டுகொண்டு அவரை இஸ்ரயேலின் அரசராக திருப்பொழிவு செய்யும் திருநிகழ்வு இன்றைய முதல் வாசகமாக அருளப் பட்டுள்ளது. ஆண்டவரின் அளவு கடந்த அதிகாரமும், சுதந்திரமும் இவ்வாசகம் வழியே வெளிப்படுவதை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியே ஒளியின் மக்களாய் வாழ புனித பவுலடியார் அழைப்புவிடுக்கின்றார். கிறிஸ்துவர்களாகிய நாம் கிறிஸ்துவுக் குள்ளே புதுவாழ்வு வாழ அழைக்கப் பட்டவர்கள், அப்புதுவாழ்வு என்பது ஒளி வாழ்வு. ஆண்டவருக்கு உகந்த வாழ்வு என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அகத்திலே விசுவாச ஒளியை ஒளிரச் செய்யும் ஒளியாம் இறைவா, அன்று தாவீதை தேர்ந்துகொண்டதைப் போல், இன்று உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்டு, திருப்பொழிவு செய்யப்பட்ட திருஅவை யின் தலைவர்கள் அனைவரும் தமது சொல்லாலும் செயலாலும் மக்கள் மனங்களில் நம்பிக்கை ஒளியையும், இருள் சூழ்ந்த உள்ளங்களில் உம் திரு ஒளியையும் ஏற்றி வைக்கும் வல்லமை யையும், ஆற்றலையும், ஆரோக்கியத் தையும் நிறைவாகப் பெற்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) உலகின் ஒளியே இறைவா, எங்களது சுயநலத்தாலும், ஆணவத் தாலும், தற்பெருமைகளாலும் நாங்கள் கண்ணிருந்தும் குருடராய் வாழ் கிறோம். இருளின் செயல்களைத் தொடர்ந்து செய்வதன்மூலம் ஒளியின் பிள்ளைகளாய் வாழத் தவறிவிட்டோம். தவறுகளை உணர்ந்து திருந்த நீர் வழங்கியுள்ள இத்தவக்காலத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி, உம் திருமகன் இயேசுவின் தெய்வீக ஒளியை எம் நெஞ்சகளில் ஏற்றி ஒளியின் மக்களாய் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) மன இருளைப் போக்குகின்ற மாசற்ற ஜோதியே இறைவா, திருமுழுக் கினாலும், பாவமன்னிப்பு அருட் சாதனத்தாலும் ஒளியின் மக்களாக மாற்றப்பட்ட நாங்கள் பாவத்திற்கு அடிமையாகி, மீண்டும் இருளின் மக்களாக மாறாமல் இறை மக்களுக்கான ஒளிமயமான உரிமைப் பேற்றில் பங்குபெறும் தகுதி உள்ளவர் களாக வாழ அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) பிறவிக் குருடனுக்கு பார்வை தந்து அவனது வாழ்வில் விளக்கேற்றி வைத்த வல்ல தேவனே, எமது நாட்டை ஆள்வோரை உம் திருக்கரங்களில் ஒப்புக்கொடுக்கிறோம். நாட்டின் ஒற்று மைக்கும், இறையான்மைக்கும், மத நல்லிணக்கத்திற்கும் பங்கம் விளை விக்காத சட்டங்களையும் திட்டங் களையும் இயற்றி, வேற்றுமையில் ஒற்றுமை என்ற உலகமே வியந்து போற்றும் நம் பாரத நாட்டின் பண்பாட்டி னை கட்டிக் காத்திடும் நல்ல தலைவர் களாய் அவர்கள் விளங்கிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# புனித சூசையப்பர் மரியாவின் கணவர் விழா

2 சாமு. 7:4-5, 12-14, 16
உரோ. 4:13, 16-18, 22. மத். 1:16, 18-21, 24

**19-03-2022**




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

ஆழ்ந்த அமைதியில் இறை செய்தியைக் கேட்டு, சந்தேகங்களை சந்தோசமாக மாற்றி தெளிவடைந்து, அமைதியில் பணிந்து நடப்பதுவே அழகு என்று வாழ்ந்து காட்டிய தூய சூசையப்பரைப் போல் நாமும் வாழ வேண்டும் என்ற வேட்கையோடு இந்த இறை சந்நதிமுன் குழுமியுள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் புனித சூசையப்பர் மரியாவின் கணவர் விழா திருப்பலிக்கு அன்புடன் வரவேற்கிறேன்.

சூசையப்பர் தாவீதின் வழி வந்தவர், நேர்மையாளர், நீதிமான், அன்னை மரியாவுக்கு அனைத்திலும் உறுதுணை யாக இருந்த உற்ற துணை, குழந்தை இயேசுவை கண்ணின் மணிபோல் பாதுகாத்து வளர்த்த அன்பு தந்தை.

எல்லோரும் நல்லவரே, அனைவரும் நேர்மையாளர்களே என்ற சிந்தனை உள்ளவர்களால் மட்டுமே நேர்மையாளர் களாக வாழ முடியும். அத்தகைய சிந்தனை கொண்ட சித்தராக, பண்பாளராக வாழ்ந்த சூசை, கன்னி மரியாவின் கணவர் என்பதை மகிழ்ச்சியோடு அறிக்கையிட்டு அதனை ஆனந்தமாக கொண்டாட திருச்சபை நம்மை அழைக்கிறது.

இல்லறமோ துறவறமோ நாம் எந்த நிலையை தேர்வு செய்தாலும், இறைவன் நம்மை அழைத்திருக்கிறாரா? என்று கேள்வி கேட்டுக் கொண்டே காலத்தைக் கடத்தாமல் தேர்ந்தெடுத்த வாழ்வில் புனித சூசையப்பரைப் போல் இறுதி மட்டும் உறுதியுடன் பயணம் செய்து வாழ்வை நிறைவு செய்ய இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

புனித சூசையப்பர் தாவீது குலத்தில் வந்தவர், அவர் வழியாக இயேசுவிலே தாவீது குலம் முழுமை பெறுகிறது என்பதை புலப்படுத்துகிறது இன்றைய முதல் வாசகம். தாவீதும், அவர் குலக் கொழுந்தான இயேசுவும் ஆலயம் கட்டினர். தாவீது அழிந்துவிடும் பொருட்களால் நிலைத்து நிற்க முடியாத ஆலயத்தைக் கட்டினார். இயேசுவோ என்றும் வாழும் தூய ஆவியாரால் நெடிது வாழும், என்றும் நிலைத்து நிற்கும் கோயிலை கட்டினார். நாம் ஒவ்வொருவரும் கடவுள் வாழும் திருக்கோயில் என்பதை நெகிழ்வுடன் உணர்ந்து மகிழ்வுடன் இவ்வாசகத்தை கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

ஆபிரகாமின் நம்பிக்கையைப் பற்றியும், அவர் இறைவனுக்கு ஏற்புடையவரானது பற்றியும் இன்றைய இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கிறது. இறையருளே நம்பிக்கையின் தொடக்கம். நம்பிக்கையே பணிவின் தொடக்கம். ஆபிரகாமின் நம்பிக்கையும், சூசையின் பணிவும் இருந்தால்போதும் இறையருள் தானாய் வந்து சேரும். கொல்பவரும் நானே. உயிரளிப்பவரும் நானே, காயப்படுத்து பவரும் நானே, குணப்படுத்துபவரும் நானே என்ற சொற்கள் தளர்ந்துபோன விசுவாசத்தை வலுப்படுத்தும் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவி கொடுப்போம்.

## மன்றாட்டுகள்

1. அன்புத் தந்தையே இறைவா, திருச்சபையின் தலைவரான எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதியும், எல்லாவற்றிலும் உம்மையே முழுமையாகத் தேடி உமக்கு தொண்டு செய்வதையே எந்நாளும் தம் கடமை என்று வாழ்ந்த தூய வளனாரைப் போல் இவர்கள் வாழவும், அவர் கொண்டிருந்த ஆன்மீகம், அவர் கடைப் பிடித்த கடவுள் பக்தி, அவர் கொண்டிருந்த இறை நம்பிக்கை ஆகியவற்றை இவர்கள் பெறவும், அதன் மூலம் சிறந்த ஞானத்தையும், நிதானத்தையும், நிறை வாழ்வையும், நிம்மதியையும் அவர்கள் பெற்று வாழவும் அருள் புரிய வேண்டுமென்று தூய சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உமது குடும்பமும், உனது அரசும் உறுதியாக இருக்கும் என்று தாவீதுக்கு நம்பிக்கை அளித்த அன்புத் தந்தையே இறைவா, புனித சூசையப்பரை குடும்பங்களின் பாதுகாவலராக தந்தமைக்காக உம்மை போற்றுகிறோம். அவரது நன்மாதிரியை பின்பற்றி, நேர்மையாளராக வாழவும், பிறர் மீது நல்லெண்ணம் கொண்டோராய் வாழவும், அவரைப் போல் மௌனத்தில் உம்மைத் தேடியும், உழைப்பில் உம்மை கண்டு வாழவும் அருள் புரிய வேண்டுமென்று தூய சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, தனது வாழ்வில் ஒவ்வொரு இக்காட்டான கட்டத்திலும் சரியான முடிவெடுத்து, யாருக்கும் பாதிப்பு இல்லாமல் வாழ்ந்து காட்டிய புனித சூசையப்பரைப் போல் எங்களது வாழ்வில் விடை காணமுடியாத பல கேள்விகள் எங்களை வாட்டுகிறபோது அவற்றை பொறுமையோடும், நம்பிக்கையோடும் எதிர்கொண்டு வெற்றி பெறவும், உமது விருப்பத்தை கண்டுணர்ந்து கடமை உணர்வோடு வாழவும் வரமருள வேண்டுமென்று புனித சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. குடும்பங்களின் தலைவரான இறைவா, எங்களது குடும்ப வாழ்க்கை விண்ணகத்தில் உறுதி செய்யப்பட்ட ஒன்று என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் முழுமையாக உணர்ந்து வாழவும், கணவன் மனைவி யாகிய நாங்கள் ஒருவரையொருவர் நிபந்தனையின்றி ஏற்று, குறை நிறைகளை ஒன்றாக பாவித்து வாழும் மனப்பக்குவத்தையும் முதிர்ச்சியையும் தாரும். எங்கள் அன்பில் விளைந்த எங்கள் பிள்ளைகளை ஞானத்திலும் ஒழுக்கத்திலும் வளர்த்து, தூய வளனாரின் திருக்குடும்பம் போல் எங்கள் குடும்பமும் திகழ அருள் புரிய வேண்டுமென்று தூய சூசையப்பர் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





# ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு

**25-03-2021**

எசா. 7:10-14, 8:10.
எபி. 10:4-10, லூக். 1:26-38



பா. சேவியர்
பட்டாபிராம், சென்னை.

## திருப்பலி முன்னுரை

கடவுள் எங்களோடு இருக்கிறார் என்ற மகிழ்வோடும், உம் திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறோம் என்ற ஆர்வத்தோடும் இறை சந்நிதானம் நோக்கி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் ஆண்டவருடைய பிறப்பின் அறிவிப்பு பெருவிழா திருப்பலிக்கு அன்புடன் வரவேற்கிறேன்.

மனித சமுதாயத்தின் தொடக்கத்திலேயே வாக்களிக்கப்பட்டு இறைவாக்கினரால் அறிவிக்கப்பட்டு, இஸ்ரயேல் இனத்தவரால் எதிர்பார்க்கப்பட்ட இறைமகனின் பிறப்பு பற்றிய அறிவிப்பை பெருவிழாவாகக் கொண்டாடி மகிழ தாய் திருச்சபை நம்மை அழைத்துள்ளது.

உலக வரலாற்றில் ஒரு பெண்ணின் ஆம் என்ற ஒற்றைச் சொல் ஒரு மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்து, ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்திவிட்டது. ஆம் என்ற அந்த ஒற்றைச்சொல் உலக வரலாற்றை கிமு, கிபி என்று இருகூறாகப் பிரித்துவிட்டது.

யாருக்குப் பணிவது சிறந்தது? உடலைக் கொல்லவல்ல உலகத்திற்கா? அல்லது ஆன்மாவைக் கொல்லும் வல்லமை கொண்ட கடவுளுக்கா? என்ற கேள்விகளை எழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வழிபாடு.

மரியாள் கடவுளின் பார்வையில் பேறு பெற்றவளாக, கருணையடைந்த பெண் மணியாக, அருள் மிகப் பெற்றவளாக படம் பிடித்து காட்டுகிறது இன்றைய வார்த்தை வழிபாடு. இறைவனின் திட்டத்திற்கு நாம் என்றும் ஆம் என்று சொல்பவர்களாய் இருக்க வேண்டும் என்பதை அன்னை மரியா வழியாக நமக்குக் கற்றுத் தருகிறது.


கன்னி மரியாள் எவ்வாறு இறைத் திட்டத்தில் பங்கெடுத்து, கடவுளின் அருளை தான் பெற்றதோடு அல்லாமல் நாமும் பெற வழி வகுத்ததைப்போல நாமும் கடவுளின் விருப்பம் அறிந்து செயல்பட, உமது விருப்பப் படியே நிகழட்டும் என்று இறைவனின் கரங்களில் நம்மையே நாம் ஒப்புக் கொடுப்போம். அதற்காக இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

மக்களை மீட்க கன்னிப் பெண் ஒருவள் கருத்தாங்கி ஒரு மகவைப் பெற்றெடுப்பாள் என்ற முன்னறிவிப்பை சுமந்து வருகிறது இன்றைய முதல் வாசகம். கிறிஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட இந்த இனிய இறைவாக்கை கவனமுடன் கேட்டு மகிழ்வோம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

புதிய பலியான இயேசு கிறிஸ்துவின் கல்வாரிப் பலியின் மேன்மையை எடுத்து ரைக்கிறது இன்றைய இரண்டாம் வாசகம். மரியாவின் ஆம், இயேசுவின் ஆம் இரண்டுமே உலக மீட்புக்கு அடிப்படையாக இருந்தன என்பதை விளக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.



திருமதி.மார்க்ரேட் பாண்டியன்
கவுண்டம்பாளையம்,கோவை

# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

*மறுக்க முடியாத மூன்று உண்மைகள்*
*அன்பாய் இருந்தால் ஏமாளி*
*உண்மையாக இருந்தால் முட்டாள்*
*நடித்தால் மட்டுமே நல்லவன்*

*தங்களை எந்தவிதத்திலும்*
*மாற்றிக்கொள்ள முடியாதவர்களின் மீது*
*கோபம் கொள்ளாதே*

*உண்மை ஒருவரைக் கொன்றுவிடுமென்றால்*
*அவர்கள் சாகட்டும்*
*-இம்மானுவேல் கான்ட்*

*பன்றிகளோடு சண்டையிடாதே*
*நாம் அழுக்கடைவோம்*
*அதோடு*
*பன்றிகள் அந்த சண்டையை*
*ரசிக்கின்றன என்ற*
*ஓர் உண்மையைக் கண்டுகொண்டேன்*
*- ஜார்ஜ் பெர்னாட்ஷா*

*புத்திசாலிகள் பிரச்னைகளை தீர்க்கின்றனர்*
*மேதாவிகள் பிரச்னைகளைத் தவிர்க்கின்றனர்*
*-ஆர்பர்ட் ஐன்ஸ்டைன்*

*எதிரியை மன்னிப்பது மிகச் சுலபம்*
*ஆனால்*
*துரோகியான நண்பனை மன்னிப்பது கடினம்*
*-வில்லியம் பிளேக்*



# திருப்பலி வாசகங்கள்

## தவக்காலம் 4ம் வாரம்

19.03.2023 முதல் 26.03.2023 முடிய

### 19.03.2023 – தவக்காலம் 4ம் வாரம் – ஞாயிற்றுக்கிழமை

1 சாமுவேல் 16/1ஆ, 6,7, 10–13அ
எபேசியர் 5/8–14
யோவான் 9/1–41

### 20.03.2023 – திங்கள்கிழமை
### புனித.யோசேப்பு–தூய கன்னி மரியாவின் கணவர் – பெருவிழா

2 சாமுவேல் 7/4–5அ, 12–14அ, 16
உரோமையர் 4/13, 16–18, 22
மத்தேயு 1/16, 18–21, 24அ
அல்லது
லூக்கா 2/41–51அ

### 21.03.2023 – செவ்வாய்க்கிழமை

எசேக்கியேல் 47/1–9, 12
யோவான் 5/1–3அ, 5–16

## 22.03.2023 – புதன்கிழமை

எசாயா 49/8–15
யோவான் 5/17–30

## 23.03.2023 – வியாழக்கிழமை

விடுதலைப் பயணம் 32/7–14
யோவான் 5/31–47

## 24.03.2023 – வெள்ளிக்கிழமை


சாலமோனின் ஞானம் 2/1அ, 12–22
யோவான் 7/1, 2, 10, 25–30

## 25.03.2023 – சனிக்கிழமை
## கிறிஸ்து பிறப்பின் அறிவிப்பு – பெருவிழா

எசாயா 7/10–14. 8/10ஆ
எபிரேயர் 10/4–10
லூக்கா 1/26–38

## 26.03.2023 –தவக்காலம் 5ம் வாரம் – ஞாயிற்றுக்கிழமை

எசேக்கியேல் 37/12–14
உரோமையர் 8/8–11
யோவான் 11/1–45



# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 37

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை



**குறள் விளக்கம்:** பல்லக்கை சுமப்பவனும் அதன் மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா.

**சிந்தனை:**

ஆர்தர் பீட்ஸ் என்பவர் எழுதிய அழகான கதை இது. இரண்டு நண்பர்கள் காரில் பயணமாகிக் கொண்டிருந்தார்கள். போக்குவரத்து சிக்னலில் சிகப்பு வண்ணம் விழுந்தது. கார் நின்றது. ஒரு நண்பர் அழுத்துக் கொண்டார். இந்த சிக்னல் பெரிய தொல்லை. நேரம் வீணாகிறது இன்னொருவர் பதிலே பேசவில்லை. கார் நகர்ந்த பிறகு ஏதோ சொன்னாயே? என்ன? என்றார். ஏன்? உன் காதில் விழவில்லையா? உடனே பதில் வந்தது. எப்போது சிக்னல் விழுந்தாலும் யாரேனும் ஒரு நண்பருக்காகப் பிரார்த்தனை செய்வேன். தினமும் என் பயணங்களில் பல நண்பர்களுக்காகப் பிரார்த்தனை செய்கிறேன் என்றார் அவர்.6

அறம் செய்கிறவர்கள் பல்லக்கில் பயணம் செய்கிறவர்கள் போலும் அறம் செய்யாமல் தீமையை செய்கின்றவர்கள் பல்லக்கை சுமப்பவர்கள் போலவும் இருப்பார்கள். அதாவது. அறத்தினால் நன்மை விளையும். நன்மை செய்வோர் மேன்மை அடைவர் என்பதே இதன் உட்கருத்து எனலாம். நன்மை செய்தால் நன்மையும் தீமை செய்தால் தீமையும் விளையும் என்பது நாமறிந்ததே.

இதனையே ஆண்டவர் இயேசுவும் வேதாகமத்தில், உங்களை ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள் லூக் 6:9, எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப் படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள் மத் 5:41 என்கிறார். நன்மையே செய்யுங்கள்: தீமை செய்யாதீர்கள் என்கிறார். மேலும் நன்மையால் தீமையை வெல்லுங்கள் என்பதே இதன் உட்பொருள். அப்பொழுது தான் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

நன்மை செய்ய நாள் இடம் குறிக்க தேவையில்லை. மனம் நன்மை செய்வதை குறியாகக் கொண்டிருந்தால் மன உளைச்சலை தரும் டிராபிக் சிக்னலும் பிறருக்கு நன்மை விரும்பும் நேரமாக மாறிவிடும். நன்மை செய்வோம் இன்றே செய்வோம்.



அருட்சகோதரி
ஜெஸிந்தா ஜான்சன்.fspm



திரு.ஜெ.அம்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்

# நலம் தரும் இயற்கை வளம்



நலம் தரும் இயற்கை வளம்.
உறவுகளே இனிய வணக்கம்.
இன்றைய நலக் கல்வி
குப்பை மேனியின் மருத்துவ மூலிகை !!
குப்பை போல் ஆகிவிட்ட மேனியை குணப்படுத்துவதால்
இந்தப்பெயர் பெற்றதாக மூலிகை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.
அரிமஞ்சிரி, அண்டகம், பூனை வணங்கி, அனந்தம், கொழிப் பூண்டு, சங்கரபுஷ்பி,
போன்ற பெயர்களும் இதற்கு உண்டு.
இது தோட்டங்களிலும்இ சாலையோரங்களிலும். காடுமேட்டில் எங்கும்
காணப்படுகிறது.
இதை யாரும் வளர்ப்பதில்லைஇ காடுமேட்டில்தானே தானே வளரும் தன்மை
உடையது.
சிறு செடியாக வளரும்.
இதன் இலை பச்சைபசேலென
முக்கோண வடிவமாக ஓரங்கள் அரும்பு அரும்பாக இருக்கும்.
இலையில் ஒரு சில இடங்களில் மஞ்சள் நிறப் புள்ளிகள் இருக்கும்.
பூக்கள் வெண்மையாகஇ சிறியதாக இருக்கும்.
காய்கள் முக்கோண வடிவில் மிளகளவில் பச்சையாகக் காணப்படும்.
காய்களைச் சுற்றிப் பச்சை நிறத்தில் செதில்கள் இருக்கும்.
மாற்றடுக்கில் அமைந்த பல அளவுகளில் உள்ள இலைகளையும்
இலைக்காம்பு இடுக்கிலமைந்த பூக்களைக் கொண்ட குறுஞ்செடி.
இது சுமார் 50 செ.மீ. உயரம் வரை வளர வல்லது.
குப்பை மேனியை மார் ஜாலமோகினி என்பர்.

**மருத்துவ குணங்கள்:**

நெஞ்சுக்கோழையை நீக்கும்.
இருமலைக்கட்டுப் படுத்தும்.

விஷக்கடி, ரத்தமூலம், வாதநோய், நமச்சல், ஆஸ்துமா, குடற்புழுக்கள், மூட்டுவலி, மற்றும் தலைவலி
போன்ற நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.
இலை வாந்தி உண்டாக்கிக் கோழையகற்றியாகவும்.
வேர் மலமிளக்கியாகவும் பயன்படுகிறது.
இலைச் சூரணத்தைப் பொடி போல் மூக்கில் இட தலை வலி நீங்கும்.
இலைஇ சிறிது மஞ்சள்இ உப்பு அறைத்துப் உடலில் பூசி
சற்றுநேரம் கழித்துக்குளிக்கத் தோல் நோய் அனைத்தும்தீரும்.
வயற்றில் இருக்கும் குடற் பூச்சிகளை போக்கவல்லது .
இதன் வேர் கிராம்200 மி.லி. நீரில் காய்ச்சி
குடிநீராக அருந்தஇ பூச்சிகள்அனைத்தும் வெளியேறும்.
குப்பைமேனி இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கி
இளம் சூட்டில் கட்டிவர படுக்கைப் புண்கள் ஆறும்.
குப்பைமேனி இலையை கைப்பிடியளவு எடுத்துச் சிறிது மஞ்சள்இ உப்பு சேர்த்து
அரைத்துப் பூசி சிறிது நேரம் கழித்துக் குளிக்கஇ தோல் நோய் குணமாகும்.
குப்பை மேனியின் வேரை நிழலில் உலர்த்திக் காய வைத்து இடித்துப் பொடியாக்கி
ஒரு கைப்பிடியளவு எடுத்து ஒரு லிட்டர் நீரில் போட்டு
200 மில்லியளவாகச் சுண்டக் காய்ச்சி
வடிகட்டிக் குடிக்க நாடாப்புழுஇ நாக்குப்பூச்சி வெளியேறும்.
குப்பைமேனி இலையை அரைத்து சாறு எடுத்து
2 தேக்கரண்டியளவு 12 வயது வரை உள்ள சிறியவர்களுக்குக் கொடுக்க
வயிற்றைக் கழியச் செய்து கோழையை அகற்றும்.
வயிற்றுப் புழுவைக் கொல்லும்.
குப்பைமேனி இலையை எடுத்துச் சாறு பிழிந்து
200 மில்லியளவு எடுத்து அதேயளவு நல்லெண்ணெயுடன் கலந்து
தைலப் பதமாகக் காய்ச்சி இறக்கி வடிகட்டி
வலியுள்ள இடத்தில் தேய்த்து வர குணமாகும்.
குப்பைமேனி இலையைச் சாறு எடுத்து அத்துடன் சிறிது வேப்பெண்ணெய் கலந்து
சிறு குழந்தைகளுக்குத் தொண்டையில்
அல்லது உள்நாக்கில் தடவ
வயிற்றில் தங்கியிருக்கும் கோழைக்கட்டுஇ வாந்தியினால் வெளியேறும்.
குப்பைமேனி இலையை அரைத்து மேகப் புண்களுக்கு வைத்துக் கட்டிவர குணமாகும்.
குப்பைமேனி இலையைக் கீரையாக ஆமணக்கு எண்ணெயில் தாளித்து
ஒரு மண்டலம் (48 நாள்கள்) தொடர்ந்து உண்டுவர
வாய்வுடனே சேர்ந்த பொல்லாத சேத்துமப்பிணிகள் எல்லாவற்றையும் போக்கி,
உடல் நலம் பெறும்.

நன்றி உறவுகளே
என்றும் உங்கள் அன்பு சகோதரன்.
ஜே. அன்புரோஸ்.
நலநெறியாளன்
9360456063